# கணவராயிருத்தல் (5:25-33)

*மனைவியர்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (5:22) என்று அறிவுறுத்திய பின்பு, பவுல் கணவர்களை நோக்கி உரையாற்றி, அவர்கள் தங்கள் மனைவியர் மீது அன்புகூர வேண்டுமென்றும் அவர்களின் தேவைகளைச் சந்திக்க வேண்டுமென்றும் உற்சாகப்படுத்தினார். ஒரு மனைவிக்கு உண்மையிலேயே தேவைப்படுவது என்ன? பின்வரும் பதிலைக் கவனியுங்கள்:*

> *ஆண்களுடனான உறவுகளில் பெரும்பாலான பெண்கள் விரும்புவது என்ன? பணியிடத்தில் சமவாய்ப்பா? இல்லத்தில் மதிப்பா? இது வேறு விதமாய் இருக்க வேண்டுமென்று இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கத்திய உலகத்தில் எவராவது ஒருவர் கூட ஆலோசனை கூறுவது என்பது மிகவும் கடினமானதாகும் ... இருப்பினும், பல பெண்களுக்கு உரிமை மற்றும் வாய்ப்புக்கள், பணியிடத்திலும் மற்றும் இல்லத்திலும் பிடிகொடாதிருக்கும் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளச் செய்கின்றது. பணி வாய்ப்புகள் பெரும்பாலும் திருப்தியளிக்கத் தவறிவிடுகின்றன. திருமணம் மற்றும் குடும்ப வாழ்வு எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருப்பதில்லை. ஆண்களுடன் அவர்களின் அன்றாட உறவுமுறைகள் எப்படியிருந்த போதிலும், பல பெண்கள் தங்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க சில விஷயங்கள், அடிப்படையான சில விஷயங்கள் இல்லாது போய் விட்டதாகவே உணருகின்றார்கள்.*
>
> *கேட்டுக் கொள்ளப்பட்டால் சில பெண்கள் - சொல்லப் போனால், சில ஆண்கள் மட்டுமே கூட - தங்கள் விரல்களைப் பிரச்சனையின் மீது இடக்கூடியவர்களாயிருக்கின்றார்கள். 1990களில் நாம் அவ்வளவு பயங்கரத்திற்குரிய வகையில் விடுவிக்கப்பட்டுள் ளோம் - மற்றும் நமது சிந்தனைகளில் அவ்வளவு உலகப்பிரகார மாயிருக்கின்றோம் ... ஆண்களிடத்தில் பெரும்பாலான பெண்கள் விரும்புவதும், ஆனால் மிகச் சில பெண்கள் மட்டுமே கண்டறிவதும் ஆவிக்குரிய தலைமைத்துவமேயாகும் என்பதை எவரேனும் எப்பொழுதாயினும் யூகித்திருப்பார்களா?[1]*

*எபேசியர் 5:25-33 வசனப் பகுதியில் "ஆண்பால் ஆவிக்குரிய தலைமைத் துவம்" என்று திட்டவட்டமான வார்த்தைகள் எதுவும் காணப்படுவ தில்லை, ஆனால் இவ்வசனப் பகுதியில் பவுல் இதைத்தான் எடுத்துரைத் தார். மனைவி தன் கணவருடைய தலைமைத்துவத்தைப் பின்பற்றுவதினால்*

கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் காண்பிப்பது போன்றே, கணவர் தனது தலைமைத்துவத்தை ஏற்ற வகையில் செயல்படுத்துகையில் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலைக் காண்பிக்கின்றார்.

ஒரு கணவர், பின்வரும் கட்டளையைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளும் பொழுது சரியாக வழிநடத்துபவராயிருக்கிறார்: "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்" (5:25அ). இந்தக் கட்டளையானது ஆண்பால் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை விவரிக்கின்றது. இது "முதலாளியாயிருத்தல்" என்பதற்கு மாறாக அன்புகூரும் ஊழியம் மற்றும் மென்மையான கவனிப்பு ஆகியவற்றைப் பற்றியதாக உள்ளது.

கணவர்களுக்குப் பவுலின் அறிவுறுத்தல்களை வாசியுங்கள்:

> புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்ளவும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாகவும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவது போல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக் கடவன், மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள் (5:25-33; TM).

பவுலின் வார்த்தைகள் பின்வரும் அடிப்படை சத்தியத்தைப் போதிக்கின்றன: ஒரு கணவர் தனது மனைவியை மென்மையாகக் கவனிப்பதற்கு தனது தலைமைத்துவத்தைப் பயன்படுத்துகின்றபோது அவர் கிறிஸ்துவை(ப் பற்றி) தீவிரமாக எடுத்துக் கொள்ளுவதைக் காண்பிக்கின்றார்.

## மென்மையான கவனிப்புக்குச் சான்றளித்தல்

கணவராயிருத்தல் என்றால் என்ன? இது ஒரு அன்புமிக்க நடத்துனராயிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது. வசனம் 25, "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள் ..." என்று கூறுகின்றது. இது எளிமையான

தாக ஒலிக்கின்றது அல்லவா? இன்றைய நாட்களில் நாம் "அன்புகூருதல்" என்ற வார்த்தையைத் தவறாகப் பயன்படுத்துவதுதான் விஷயத்தைச் சிக்கலாக்கி விடுகின்றது. "அன்பு" என்பது அடிக்கடி இணைந்த இழைகளுடன் வருகின்றது: சிலருக்கு அன்பு என்பது அவள் இளமையுடனும் அழகுடனும் இருக்கும் வரைக்கும் அவளை நல்ல முறையில் நடத்தி வருதல் என்றாகின்றது. மற்றவர்களுக்கு, இது அவள் உங்களுக்கு நல்லவளாய் இருக்கும் வரையில் அவளுக்கு நல்லவளாயிருத்தல், பிள்ளைகளுக்காக அவளிடத்தில் மென்மையாயிருத்தல் அல்லது வீட்டைக் கவனிக்கவும் பிள்ளைகளை வளர்க்கவும் அவள் மேற்கொள்ளுகின்ற முயற்சிகளுக்குக் கைமாறாக அவளுக்குத் தேவையானவற்றை அளித்தல் என்பதாக உள்ளது.

அன்பு என்ற கருத்தைக் குறித்து நாம் விரும்புகின்ற எந்த விளக்கத்தையும் இணைத்துக் கொள்வதற்குப் பவுல் நமக்கு இடம் அளிக்கவில்லை. பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்ததை நாம் புரிந்து கொள்வதற்கு இரண்டு ஒப்புவமைகளை அளித்தார்.

பவுலின் முதலாவது, ஒப்பீட்டானது, "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (5:25) என்று தெளிவாகக் கூறுகின்றது. கணவர்களும் மனைவியர்களும் கொண்டிருக்க வேண்டிய உறவுக்கான முன்மாதிரியானது கிறிஸ்துவிலும் அவரது சபையிலும் காணப்படுகின்றது. அது ஒரு வல்லமை மிகுந்த உதாரணமாக உள்ளது! எபேசியருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும் பவுல், கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்குமிடையே உள்ள வலிவார்ந்த இணைப்பை வலியுறுத்தினார். கிறிஸ்து, சபையின் தலையாக உயர்த்தப்பட்டிருக்கின்றார் (1:22; 4:15). கிறிஸ்து, சபையின்மீது அன்புகூர்ந்து தம்மைத் தாமே அதற்காகக் கையளித்தார் (3:19; 5:2). கிறிஸ்து தமது சொந்த மரணத்தினால் சபைக்கு இரட்சிப்பை வாங்கித் தந்தார் (1:7, 13; 2:5, 6; 2:14-18). அவர் தமது சபையின் தேவைகள் மற்றும் வளர்ச்சி குறித்து அக்கறை மிக்கவராக இருக்கின்றார் (4:11-16), மற்றும் அவர் தமது சபையைச் சேர்ந்தவர்களின் இருதயங்களில் வாசம் பண்ணுகின்றார் (3:17). கிறிஸ்து தமது சபையின் வளர்ச்சிக்கும் நன்மைக்கும் தேவையான எல்லாவற்றையும் அளிக்கின்றார் (4:15, 16).

இவை யாவற்றையும் பவுல் கூறியிருந்தார். இப்பொழுது, அதிகாரம் 5ல் பவுல், கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் உள்ள நம்புதற்கரிய உறவை, கணவர் தம் மனைவியின் மீது கொண்டிருக்க வேண்டிய அன்புக்கு மாதிரியாகப் பற்றி உயர்த்துகின்றார். இப்படிப்பட்ட ஒரு ஒப்பீட்டைப் பயன்படுத்தப் பவுல் துணிந்தார் என்பது, நான் எனது மனைவியுடனும் நீங்கள் உங்கள் மனைவியுடனும் கொண்டுள்ள உறவின் வழிமுறை பற்றி அவர் எவ்வளவு தீவிரமான அக்கறை கொண்டார் என்பதை சுட்டிக் காண்பிக்கின்றது.

அதிகாரம் 5ல் பவுல், சபையின்மீது கிறிஸ்து கொண்டுள்ள அன்பின் உறுதிப்பாட்டினுடைய விவரிக்க இயலாத படிநிலைகளை முன் வைத்தார்.

இது நமக்கு கிறிஸ்துவின் அன்பைப் பற்றி புரிந்து கொள்ளும் உணர் வொன்றைத் தருகின்றது.

முதலாவது, கிறிஸ்து சபையின்மீது அன்புகூர்ந்தார். இது நம்மை கடந்த கால நித்தியத்துவத்திற்கு எடுத்துச் செல்லுகின்றது. படைப்புக்கு முன்னதாக, கிறிஸ்து ஏற்கனவே தமது சபையின்மீது அன்பு கூர்ந்திருந்தார். சபையானது தேவனுடைய சிந்தையில் ஒரு எண்ணமாக இருந்த பொழுதே கிறிஸ்து அதன் மீது அன்புகூர்ந்தார்.

இரண்டாவது, கிறிஸ்து சபைக்காகத் தம்மையே கையளித்தார். அவர் சபைக்கு உயிரளிப்பதற்காக பரலோகத்தை விட்டு, பூமிக்கு வந்து, மனிதனாகி, மரித்தார். அவர் ஏதொன்றையும் தமக்காக வைத்துக் கொள்ளா மல், தமக்குரிய எல்லாவற்றையும் (சபைக்காக) ஒப்புக் கொடுத்தார்.

மூன்றாவது, கிறிஸ்து சபையை வசனத்தின் மூலம், தண்ணீர் முழுக் கினால் சுத்திகரித்துப் பரிசுத்தப்படுத்தினார். இதைப் பவுல் தமது சொந்த அனுபவத்தின் மூலம் அறிந்திருந்தார். அவர் கிறிஸ்துவின் சபைக்கு உரியவராவதற்கு முன்பு, ஒரு பாவியாயிருந்த வேளையில், இரட்சிக்கப்படு வதற்கும், சபையில் இணைக்கப்படுவதற்கும் அவர் செய்ய வேண்டியது என்னவென்று அவருக்குக் கூறப்பட்டது. அவர் பின்வரும் வார்த்தைகளைக் கேட்டார்: "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 22:16). பல நாமகரணக் கூட்டங்களில் இருந்து கிறிஸ்துவின் சபைகளைத் தனியே பிரித்து வைப்பது பின்வரும் நம்பிக்கையே ஆகும்: தேவனுடைய வசனத்தின் மீதுள்ள விசுவாசத்தினால் ஒருவர் தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வருகின்ற பொழுது, அந்த நபர் இயல்பான தண்ணீரி னால் அல்ல ஆனால் கிறிஸ்துவின் வல்லமையினாலேயே ஆவிக்குரிய முறையில் சுத்திகரிக்கப்படுகின்றார். கிறிஸ்து தமது சபையைச் சுத்தி கரிக்கின்றார்.

நான்காவது, சபையைப் பரிசுத்தமாக்குவதற்கான தமது முயற்சிகளில் கிறிஸ்து, சபையின் மீதான தம்முடைய அன்பைக் காண்பிக்கின்றார். இந்த வினைச் சொல்லின் காலக்குறிப்பானது கிறிஸ்து செய்ய முயற்சிக்கின்ற ஒவ்வொன்றையும் தொகுத்துரைக்கின்றது. அவர், தமது சபையைப் பண்பிலும் நடக்கையிலும் பரிசுத்தப்படுத்த விரும்புகின்றார்: "அவர் செய்கின்ற மற்றும் கூறுகின்ற ஒவ்வொன்றும் சபையினிடத்திலிருந்து மிகச் சிறந்தவற்றை வெளிக் கொண்டு வருவதற்கானதாகவே உள்ளது" (5:27).

நிறைவாக, கிறிஸ்து தம் சபையை அன்புகூருகின்றார், மற்றும் காலங்களின் முடிவில் அவர் சபையைத் தமக்கென்று கதிர் வீசும் சபையாகத் தம்மிடத்தில் எடுத்துக் கொள்வார். "கதிர் வீசுகின்ற" என்பதற்கான கிரேக்க வார்த்தையான endoxos என்பது, நேரடியான "மகிமையுள்ள" என்று அர்த்தப்படுகின்றது. வேத வசனங்களில் "மகிமையுள்ள" என்பது தேவனு டைய பண்பின் பிரகாசிக்கின்ற, காணக் கூடிய கதிர் வீச்சாக உள்ளது. ஒரு நாளிலே கிறிஸ்துவின் அன்பானது, அவர் தமது சபையை தேவனுடைய அழகின் கதிர் வீச்சைப் பெறும் இடம் வரைக்கும் எடுத்துக் கொண்டு போகச் செய்யும். இன்னொரு அப்போஸ்தலரான யோவான், இது எவ்வாறு

*இருக்கும் என்பது பற்றி நமக்குக் குறிப்பு ஒன்றைத் தருகின்றார்:*

> *பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைத் தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மண வாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது (வெளி. 21:1, 2).*

*கிறிஸ்து தமது சபையின்மீது கொண்டுள்ள அன்பைப் புரிந்து கொள்ள முயற்சித்தல் என்பது நம் அறிவுக்கு அப்பாற்பட்டது. கிறிஸ்து தமது சபையின்மீது கொண்டுள்ள அன்பைப் புரிந்து கொள்வதைக் காட்டிலும் உலகத்தின் எல்லாக் கடற்கரைகளிலும் உள்ள மணற்துகள்களை எண்ணிக் கணக்கிடுவதென்பது நமக்குச் சுலபமானதாயிருக்கும். அவரது அன்பு நித்தியத்தின் கடந்த காலத்திலிருந்து நிகழ்காலம் வரையிலும் மற்றும் நித்தியத்தின் எதிர்காலம் வரையிலும் பரந்து விரிந்து நிற்கின்றது.*

*புரிந்து கொள்ளப்பட முடியாத இந்த அன்பைக் குறித்து நாம் என்ன செய்கின்றோம்? கணவர்களே, இது நம்மை முழங்காற்படியிடச் செய்ய வேண்டும். நமது திருமணங்கள் எப்படியிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ, அப்படியிராமல் நம்மைத் தடுக்கின்ற அழகற்ற மேட்டிமையை நாம் நீக்கிப் போட வேண்டும். நமது மனைவியர்களுக்கு வேலையாட்களாய் இருப்பதினின்று நம்மை தடுக்கின்ற சுயநலத்தை நாம் நீக்கிப் போட வேண்டும்.*

*எனது மனைவிக்கு ஒரு ஊழிய நடத்துனர்தான் தேவை என்று கிறிஸ்து எனக்குக் காண்பிக்கின்றார். அவளுக்குத் தன்னை நேசிக்கக் கூடிய, எடுப்பதற்கு மாறாக கொடுக்கக் கூடிய, அவளிடத்திலிருந்து மிகச் சிறந்த வற்றை வெளிக் கொண்டு வருவதை நாடக் கூடிய, மற்றும் அவள் தேவனு டைய பிள்ளை என்ற வகையில் தேவன் தம் சித்தத்தில் கொண்டுள்ளபடி அவளுக்காக மாறுவதை விரும்பக் கூடிய ஒருவர் அவளுக்குத் தேவை.*

## மென்மையான கவனிப்பை அநுபவித்தல்

*நாம் நமது மனைவியரிடம் கொண்டிருக்க வேண்டிய அன்பைப் புரிந்து கொள்ள நமக்கு உதவுவதற்குப் பவுல் இரண்டாவது ஒப்பீடு ஒன்றை யளித்தார். இது நமது சொந்த அநுபவத்திலிருந்து வருகின்றது: "அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; ... ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்" (5:28, 29ஆ). என்னை நான் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் இதிலிருந்து நான் புரிந்து கொள்கின்ற விஷயமாக உள்ளது. எனக்குப் பசி எடுக்கின்ற போது, நான் உணவு உண்ணு*

*கின்றேன். நான் களைப்படையும் பொழுது இளைப்பாறுகின்றேன். எனக்குக் காயம் படுகிற பொழுது, எனது வலியைக் குறைக்கக் கூடியவற்றைச் செய்து கொள்ளுகின்றேன்.*

*திருமணம் என்பது மிகவும் அற்புதமானது ஏனென்றால் - நாம் இருவர் ஒரே உடலாகின்றோம்—நான் என் மனைவியை நேசிக்கையில், என் மீதே அன்பை வெளிப்படுத்துகின்றேன். அவள் மீது நான் கொள்கிற அக்கறையானது என் மீது நான் கொள்ளும் அக்கறையாகவும் உள்ளது.*

*என்றால், நாம் நமது மனைவியர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? பின்வரும் பட்டியலானது நாம் தொடங்குவதற்கு உதவக் கூடும். கணவர்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:*

> *உங்கள் நேரத்தைக் கொடுங்கள் … அவள் உங்கள் முதன்மை யானவளாய் இருக்கிறாள்;*
> *உங்கள் பிரசன்னத்தைக் கொடுங்கள் ... உடல் மற்றும் உணர்வு ரீதியான பிரசன்னம் இரண்டையுமே.*
> *சத்தியத்தைக் கொடுங்கள் ... இல்லத்தில் ஆவிக்குரிய தலைமைத் துவத்தை மேற்கொள்ளுங்கள்; உங்கள் மனைவியும் குடும்பத்தவர் யாவரும் சத்தியத்தைக் கற்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்;*
> *உங்கள் அன்பைக் கொடுங்கள் ... அவளது தேவையைச் சந்திக்க;*
> *உங்கள் ஜெபத்தை கொடுங்கள் ... அவளது மென்மையான கவனிப்புக்காக பிதாவினிடம்;*
> *உங்கள் மன்னிப்பைக் கொடுங்கள் ... உறவை மீளக் கட்டியெழுப்ப;*
> *உங்கள் தலைமைத்துவத்தைக் கொடுங்கள் ... இல்லத்திற்கும் குடும்பத்திற்கும்;*
> *உங்கள் உடமையைக் கொடுங்கள் ... உங்களுக்குள்ள யாவற்றையும் அவளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.*[2]

## மென்மையான கவனிப்பை நடைமுறைப்படுத்துதல்

*‘‘கீழ்ப்படிதல்’’ என்பதே மனைவியர்களுக்கான தேவனுடைய வார்த்தையாக உள்ளது (5:22). ‘‘அன்புகூருங்கள்’’ என்பதே கணவர் களுக்கான தேவனுடைய வார்த்தையாக உள்ளது (5:25). உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்: “என்னைக் காட்டிலும் எனது துணையின் மீது நான் மிகுந்த அக்கறை செலுத்துகின்றேனா?”*

*அக்கறையுள்ள கணவர் ஒருவர் ஒருபோதும் தனது மனைவியின் நடக்கையினால் சலிப்படைய மாட்டார். அவள் கொடுக்க இயல்வதை விட அதிகமாக அவர் அவளிடமிருந்து எதிர்பார்க்க மாட்டார், மற்றும் அவர் தமது சுய வழியை வற்புறுத்தாமலிருக்கின்றார்.*

*கிறிஸ்தவத் திருமணத்தில் மென்மையான கவனிப்பு என்பது 1 கொரி. 13:4-8ல் மாதிரிப் படுத்தப்பட்டதாக உள்ளது. இது பொறுமை, இரக்கம் மற்றும் மன்னிப்பு ஆகிய பண்புகளைக் கொண்ட அன்பிலிருந்து வருகின்றது. இது பொறாமையுடையதாகவோ அல்லது கர்வமுடைய தாகவோ இருப்பதில்லை, ஆனால் இது கணவரை எப்பொழுதும் தம்*

*மனைவிக்கு மிகச் சிறந்தவற்றையே நினைக்கும்படி வழிநடத்துகின்றது. இப்படிப்பட்ட அன்பானது ஒருக்காலும் இறவாது.*

*கிறிஸ்துவுக்கும் தமது திருமணத்திற்கும் ஒப்புக்கொடுத்தலுடன் இருக்கின்ற கணவர், தமது மனைவி ஆவிக்குரிய வகையில் வளர்வதைக் காண்பதில் மாபெரும் மகிழ்ச்சியடைகிறார். அவள் தேவன் விரும்பிய படியெல்லாம் இருப்பதற்கு அவர் (கணவர்) உதவுகிறார், மற்றும் அவர் அவளது வாழ்வில் தேவனுடைய திட்டத்தின் மீது நம்பிக்கையுள்ள வராயிருக்கிறார்.*

## *முடிவுரை*

*கணவர்களே, நீங்கள் பரிபூரணப்பட்டவர்களாயிருக்க வேண்டு மென்று தேவன் எதிர்பார்ப்பதில்லை, ஆனால் உங்கள் மனைவிக்கு உங்களிடத்திலிருந்து தேவைப்படுகின்ற அன்பு மற்றும் மென்மையான கவனிப்பு ஆகியவற்றைக் காண்பிப்பதற்கு உங்களிடம் உள்ள யாவற்றையும் நீங்கள் தர வேண்டும் என்ற அவர் எதிர்பார்க்கின்றார்.*

*இயேசுவைக் கண்ணோக்குங்கள். அவர் உங்களுக்கு உதவத் தயாரா யிருக்கின்றார். தேவன் விரும்புகின்ற வகையிலான கணவராயிருக்கும் படிக்கு உங்களை மீண்டும் ஒப்புக் கொடுப்பதற்கான ஏன் சற்று நேரம் எடுத்துக் கொள்ளக் கூடாது? தேவன் உங்களைப் பலப்படுத்தவும் உங்களுக்கு உதவவும் தமது வாக்குத்தத்தத்தைக் காத்துக் கொள்வார்.*

*"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், ..."*

---

*குறிப்புகள்*

[1]F. LaGard Smith, *What Most Women Want: What Few Women Find* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1992), 7-8. [2]Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 191.